ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1825/38 - 2013 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2013.08.30

*1825/38 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 25/73*

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படுவதாகிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுக்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்தானந்த அளுத்கமகே,
விளையாட்டுக்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2013, ஓகத்து 30.*

ஒழுங்குவிதிகள்

*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதிய 1793/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய விளையாட்டுக் கழகங்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் 54 (2) ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :-*

"(3) முற்போந்த ஒழுங்குவிதிகள் எவற்றிலும் எது எவ்வாறிருப்பினும் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கத்துக்காகவும் அத்தகைய முறையிலும் ஏதேனும் தேசிய கழகத்தின் ஆண்டு விசேடப் பொதுக்கூட்டமொன்றை, பொதுக்கூட்டமொன்றை அல்லது குழுக் கூட்டமொன்றைக் கூட்டும்படியும் நடாத்தும்படியும் விளையாட்டமைச்சின் செயலாளரை, மேலதிக செயலாளரை அல்லது விளையாட்டுக்களின் தலைமையதிபதியை அமைச்சர் பணிக்கலாம். அவ்வாறு கூட்டப்பட்டு நடாத்தப்படும் அத்தகைய ஏதேனும் கூட்டம் அத்தேசிய கழகத்தின் முறையாக அமைக்கப்பட்ட கூட்டமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

*9- 390*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*